# 1872 இந்திய சாட்சிய சட்டம்

## இயற்றியவர் – ஜேம்ஸ் ஸ்டீபன் (Sir James Stephen)

## Part 1

## Chapter – I முன்னுரை

**பிரிவு 1 குறுந்தலைப்பு, அலாவுகை தொடக்கம்.**

**பிரிவு 2 நீக்கப்பட்டது**

***பிரிவு – 3**

**<u>C – Court</u>**

Indian oath act 1969 படி சாட்சியம் பதிவு செய்யும் மன்றம் எதுவும் கோர்ட் ஆகும்.

**<u>D – Document</u>**

தாள் மட்டும் Document இல்லை குறியீடு செய்யப்பட்ட அல்லது எழுதப்பட்ட எந்த பொருளுமே Document தான்.

**<u>E – Evidence</u>**

பிரிவு 59, வாய்மொழி சாட்சியம், 61 ஆவண சாட்சியம்

வாய்மொழி சாட்சியம் 59 IEA

நேரடி சாட்சியம்

கேள்வி சாட்சியம் 60 IEA (6,9,32(1) விதிவிளக்கு)

சந்தர்ப்ப சாட்சியம் 156 IEA

என மூன்று வகைப்படும்

**<u>F – Fact - பொருண்மை</u>**

பொருண்மை என்பது

1) புலன்களால் அறியக்கூடிய பொருள்

   பொருள்களின் நிலை

   பொருள்களின் உறவு எதுவும், Anything, State of things or Relation of things, capable of being perceived by the senses. (உடல் புலன்களால் அறியக்கூடியது)

2) எவரேனும் ஒருவரின் உணர்வுக்கு தெரிகிற மனநிலை எதுவும்

   (Any mental condition of which any person is conscious) உள்ளுணர்வால் அறியக்கூடியது.

**<u>பிரச்சனைக்குரிய பொருண்மை</u>**

**<u>Fact in issue (Factum Probandam) தீர்வுதரு நிகழ்மை</u>**

One party asserts where as other party denied ஒருவர் குற்றச்சாட்டு சொல்ல அதை எதிர் தரப்பு மறுப்பது

(உதாரணம்) கணவன் மனைவிக்குள் 3 மாதம் முன்பு திருமணம் நடந்து நன்றாக குடும்பம் நடத்தி, பின்பு மனைவி நீதிமன்றத்தில், கணவன் கொடுமை செய்வதாக விவாகரத்து கேட்டும், கணவன் தான் கொடுமை செய்யவில்லை. அதனால் சேர்ந்து வாழவேண்டும் என கோருவதும் ஆகும்.

**<u>தொடர்புடைய பொருண்மை தீர்வுதவு நிகழ்மை (Factum Probans)</u>**

Relavant Fact (Factum Probans) தொடர்புடைய பொருண்மை மூலமாகத் தான் பிரச்சனைக்குரிய பொருண்மையை நிரூபிக்கவேண்டும்.

Proved – மெய்ப்பிக்கப்பட்டது

Dis Proved – பொய்ப்பிக்கப்பட்டது

Not Proved – மெய்ப்பிக்கப்படாதது (அல்லது) மெய்ப்பிக்கப்படவில்லை

***Sec – 4** பிரிவு 86 to 88 and 90, 114 May Presume – அனுமானிக்கலாம்

**113** A IEA, 306 IPC, 113 B IEA, 304 B IPC

பிரிவு 79 to 85, 89, 105 Shall Presume – அனுமானித்தல் வேண்டும்.

பிரிவு **41, 112, 113** Conclusive Proof – அறுதியான சான்றுறுதி

## Chapter – 2

## பொருண்மைகளின் தொடர்புடைமை பற்றி

***Sec – 5** பிரிவு **5** முதல் **55** வரை உள்ளவைகள் பிரச்சனைக்குரிய பொருண்மையை (Fact in Issue) தொடர்புடைய பிரச்சனை மூலமாக (Relavant Fact) நிரூபிக்க வேண்டும்.

All Admissible Fact are Relavant but all relavant fact are not admissible நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கக்கூடிய எல்லா பொருண்மைகளுமே பொருத்தமுடைய பொருண்மைகள்தான். ஆனால் பொருத்தமுடைய எல்லா பொருண்மைகளையும் நீதிமன்றம் ஏற்காது. (உதாரணம்) (பிரிவு – 25 IEA, 164 crpc) பிரிவுகள் 5 to 55 வரை உள்ளவைகளில் எந்தெந்த பிரிவுகள் ஏற்புடையவை என சாட்சிய சட்டத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் எந்த பொருண்மைகளை நீதிமன்றம் ஏற்கும் என நடுவர் (or) நீதிபதி (Presiding Officer) தீர்மானிப்பார் (பிரிவு **136**IEA)

***Sec – 6** ஒன்றிய செயல் (Resgestae) Part of Transaction

ஒரு சம்பவம் நடக்கும்போது சற்றுமுன்னாலோ (Shortly before) சற்று பின்னாலோ (Shortly after) யார் எதைச்சொன்னாலும் யார் எதைச்செய்தாலும் அது (Relavant) தொடர்புடைய சங்கதி என

நீதிமன்றம் ஏற்கும். (Proximity of Time and Place) (கேள்வி சாட்சியம் – 6, 9 – 32 (1) இவைகளை நீதிமன்றம் ஏற்கும்)

***Sec – 7** <u>Occasion cause effect</u>

<u>வாய்ப்பு காரணம் விளைவு</u>

இவைகள் (Relavant)

தொடர்புடைய சங்கதிகளாக நீதிமன்றம் ஏற்கும்

***Sec – 8** Motive – உள்நோக்கம்

Preparation – முன்னேற்பாடு

Conduct Previous Subsequent - முந்தைய நடத்தை, பிந்தைய நடத்தை Intension – உள் எண்ணம் Proximity அருகில் குழந்தையின் பசிக்காக – Motive பன்னை திருடினேன் – Intension சட்டம் Intension ஐ கணக்கில் எடுத்துக்கொள்ளும். சட்டத்திற்கு இல்லை அர்த்தத்தில் அக்கரை

***Sec – 9** அடையாள அணிவகுப்பு Relavant

நபர் அல்லது பொருள்

Test Identification Parade by Magistrate

291 A Crpc, PSO 600

***Sec – 10** குற்ற உடந்தை (Conspiracy)

***Sce – 11** Alibi வேற்றிடவாதம் / குற்றம் நடக்கும் சமயம் சம்பவ இடத்தில் இல்லை என்பதை எதிரிதான் நிரூபிக்க வேண்டும். 102 IEA

***Sec – 12** நஷ்ட ஈடு கோரும்போது ஒருவரின் தகுதிபற்றி நீதிமன்றம் கணக்கில் எடுத்துக்கொள்ளும்.

**Sec – 13** <u>Right Custom</u>

<u>உரிமை வழக்காறு</u>

(உதாரணம்) சிவில் வழக்குகளில் குளத்தில் மீன்பிடிக்கும் உரிமை (or) சொத்தின் உரிமை யாருக்கு இருந்தது என்ற பொருண்மை Coupled 48 IEA

***Sec – 14** ஒரே மாதிரியான பொருண்மை Similar Fact உட்கருத்து, அறிவு, நல்லெண்ணம், அசட்டை, முரட்டுத்தனம், விருப்பு அல்லது வெறுப்பு போன்ற மனநிலையின் உண்மையைக் காட்டுகின்ற சங்கதிகள் தொடர்புற்றவையாகும்.

**Sec – 15** ஒரு செயல் தற்செயலானதா ?
உட்கருத்து கொண்டதா ?
என்கிற பொருண்மை – காப்பீடு பெற

**Sec – 16** ஒரு மடல் உரியவருக்கு அனுப்பப்பட்டதா ? போய்ச்சேர்ந்ததா ? என்கிற பொருண்மைகள் (உதாரணம்) கடிதம் எழுதினேன் சரியான முகவரி இட்டேன் அஞ்சல் அலுவலக பெட்டியில் போஸ்ட் செய்தேன்

***Sec – 17** ஏற்புரை

1) ஏற்புரை என்பது ஒரு உரை
2) இது வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ Electronic Record (மின்னனு வடிவம்) இருக்கலாம்.
3) இது Fact in issue, Relvant Fact மூலமாக யூகிக்கின்ற விதமாக இருக்கும்

| Admission | Confession |
|---|---|
| ஏற்புரை | குற்ற ஏற்புரை |
| 18 to 20, 21 to 23, 31 IEA | பிரிவுகள் 24, 25, 26, 27, 28, 29, 30 |

***Sec - 18** ஏற்புரையையார் கொடுக்கலாம் ?
வழக்கு தரப்பினர்கள்
முகவர்கள்

பிரதிநிதிகள்
வழக்கில் அக்கறை கொண்டவர்கள்

**Sec - 19** வீடு வாடகை வசூலிக்க மூன்றாம் தரப்பினரிடம் சொன்னவை

**Sec - 20** நான் முருகன் என்பவரிடம் ஒரு கால்நடை வாங்கினேன். நல்ல நிலையில் இருந்ததா ? என கேள்வி கால்நடைபற்றி தெரிந்த கந்தன் கூறும் பொருண்மை ஏற்புடையது ஆகும்.

**Sec - 21** ஏற்புரையை யார் நிரூபிக்கலாம் ?
உயிருடன் இருக்கும் ஒருவர் அவருக்கு சாதகமாக பயன்படுத்தமுடியாது (கடிதம்)

**Sec – 22** D என்ற Data மீது Credit இன்னொருவரிடம் சொன்ன கூற்று

***Sec 22A** Electronic Record Document பற்றி சொன்ன வாய்மொழி சாட்சியம் செல்லும்

**Sec - 23** Promissary Note பற்றி நீதிமன்றத்தில் வழக்கு நடக்கும்போது Legal Aid ல் கடன் வாங்கியவர் சொன்ன கூற்று நீதிமன்றத்திற்கு பொருந்தாது (265 CRPC A To L வரை) (Cupled 129)

***Sec - 24** (Induced confession) அச்சுறுத்தல், தூண்டுதல் போன்ற ஒப்புதலுரையை நீதிமன்றம் ஏற்காது.

***Sec - 25** காவல் அதிகாரி முன்பு கொடுக்கப்பட குற்றவாளியின் ஒப்புதலுரையை நீதிமன்றம் ஏற்காது.

***Sec – 26** நீதிமன்றக்காவலில் இருக்கும் நபர் குற்றவியல் நடுவரிடம் கூறும் ஒப்புதல் வாக்குமூலம் ஏற்புடையது – 164 CRPC

***Sec – 27** குற்றம் ஏதேனும் சுமத்தப்பட்டு காவல் அலுவலர் பாதுகாப்பில் உள்ள ஒருவர் ஐயத்திற்கிடமின்றி சம்பந்தம் உடைய சங்கதி எதுவும் கண்டுபிடிக்கப்பட்ட தகவல் மட்டும் மெய்ப்பிக்கப்படலாம் Leading to Recovery Discover of New Facts 8 IEA (தகவல்)

***Sec – 28** தூண்டுதல் அச்சுறுத்தல் இன்றி ஒருவர் கொடுத்த ஒப்புதலுரை மெய்ப்பிக்கப்படல் ஆகும். (கிராமநிர்வாக அலுவலரிடம் சரண்டர் ஆகி ஒருவர் கூறும் ஒப்புதலுரை)

**Sec – 29** வஞ்சனை செய்து பெறப்பட்ட அல்லது குடிபோதையில் இருக்கும்போது அல்லது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படலாம் என்று அவருக்கு எச்சரிக்கப்படவில்லை என்றாலும் மேற்படி ஒப்புதலுரை மெய்ப்பிக்கப்படலாகும்.

***Sec – 30** ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் செய்த குற்றத்தில் ஒருவர் கூறிய ஒப்புதலுரை மற்றவர்களையும் உள்ளடக்கும் குற்றமுயற்சியையும் உள்ளடக்கும். (CO – accused confession)

***Sec – 31** ஏற்புரைகள், ஒப்புக்கொள்ளப்பட்ட உறுதியான நிரூபணம் அல்ல. ஆனால், முரண்தடையாகவும் இயங்கும் (Sec – 31 and 115, 116, 117 IEA) (உதாரணம்) வாகனவிபத்து வழக்கில் எதிரியே வாதியாக புகார் தரும்போது அவரது உரை சிறிதளவு மெய்ப்பிக்கும்.

***Sec – 32** சாட்சிகளாக தருவிக்கப்படமுடியாதவர் ஒப்புதலுரை

(1) மரணவாக்குமூலம்

(2) தொழில் நடப்புமுறையில்

(3) உரை செய்தவரின் நலனுக்கு எதிரானது

(4) பொது உரிமை தொடர்பான கருத்து

(5) நபர்களுக்கு இடையேயான உறவுமுறை தொடர்பான உரை

(6) ஒரு உயிலில் செய்யப்பட்ட உரை

(7) Sec – 13 ல் சொல்லப்பட்ட விதமாக

(8) ஒரு உரை பலநபர்களால் செய்யப்பட்டிருக்கும் போது பத்திரிக்கையில் வந்த அவதூறு பற்றி படித்தவர்கள் சொன்ன உரை (PSO 601 தூங்குமாட்டி இறந்தவர்)

**Sec – 33** Dying Deposition (மரணத்தறுவாயில்) வாய்மொழியான உரை எதுவும் மெய்ப்பிக்கப்படலாம். 309 Crpc

**Sec - 34** கணக்குப் பேரேடுகளில், பதிவு செய்யப்பட்டவற்றை பிற சாட்சி வாக்கு மூலத்தின் பேரில் நிரூபிக்கலாம்.

**Sec – 35** பொது ஊழியரின் அலுவலகப் பதிவேடு அல்லது ஆவணம் ஆகியவற்றின் மூலம் தொடர்புற்ற சங்கதியை நிரூபிக்கலாம். (Coupled GD)

**Sec – 36** மத்திய மாநில அரசுகளின் புவிப்படங்கள் விளக்க அட்டவணை அல்லது பிரசுரிக்கப்பட்டு பொது விற்பனைக்காக சாதாரணமாக வைக்கப்படும் புவிப்படங்கள் மூலம் நிரூபிக்கலாம். (Map FMB)

**Sec – 37** சட்டங்கள் அறிவிக்கை (யூனைட்டெட் கிங்டம்) நாடாளுமன்ற சட்டமன்ற கெஜட் அரசிதழ் வெளியீடு மூலம் நிரூபணம்

**Sec – 38** சட்ட நூல்களில் அடங்கியுள்ள ஒரு சட்டம் பற்றிய உரைகள் (Any Law Books) Relavant

**Sec – 39** சாட்சிய உரை நீண்டதோர் உரையின் அல்லது உரையாடலின் பாகமாக இருப்பின் சூழ்நிலையை மெய்ப்பிக்க குறிப்பிட்ட பகுதி மட்டும் சாட்சியம் நிரூபிக்க ஏற்புடையது. (நீதிபதி குமாரசாமி CM)

**Sec – 40** நீதிமன்ற தீர்ப்புகள் எப்போது தொடர்புடையவை ? ஒருவழக்கை நீதிமன்றம் விசாரிக்க எடுத்துக்கொள்வதா ? வேண்டாமா ? என்பதை முடிவு செய்யும் தீர்ப்பாணை ஒரு தொடர்புற்ற சங்கதியாகும். (உதாரணம்) 300 குவிமுச, 1.விசாரிக்க கூடாது, 4. விசாரிக்கலாம்.

**Sec – 41** ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பு முழு உலகையும் கட்டுப்படுத்தும் (திருமணம்) (குழந்தை) Coupled with Sec - 112, 113 IEA (Judgment in Rem Conclusive Proof)

**Sec – 42** ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பு பொதுத்தன்மை வாய்ந்ததாக இருந்தால் ஏற்புடையது ஆகும். (பாதை மீதான உரிமை) (41 போல)

**Sec – 43** வழங்கப்பட்ட தீர்ப்பே ஒரு பிரச்சனையாக இருந்தால் அதை மீண்டும் தொடர்புபடுத்தலாம். ஆனால் அந்த தீர்ப்பே உறுதியான நிரூபணம் அல்ல. (பாபர் மசுதி இடிப்பு)

**Sec – 44** ஏற்கனவே கொடுக்கப்பட்ட தீர்ப்பு வஞ்சகமாக வாங்கப்பட்டது. (Fraud) அல்லது தகுதியற்ற தீர்ப்பாக நீதிமன்றம் வழங்கியிருந்தால், அதை நிரூபித்தால் தொடர்பற்ற சங்கதியாகும். (தீர்ப்பு தீர்ப்புதான்)

***Sec – 45** Who is Expert ?
மூன்றாம் நபர் சாட்சியம் அல்லது வல்லுநர் சாட்சியம்.
அயல்நாட்டுச்சட்டம், விஞ்ஞானம், கலை கையெழுத்து, விரல்ரேகை போன்றவை நிரூபணம். (77 IPC) (வல்லுநர்)

***Sec 45A** Electronic சம்பந்தப்பட்டவை நிரூபணம் ஆகும்

**Sec – 46** Contra opinion
ஒருவர் இந்த நஞ்சை உண்டு இறந்துள்ளார் என நிரூபிக்கும் போது இல்லை. இவர் வேறொரு நஞ்சை உண்டுதான் இறந்துள்ளார் என மாற்றுக் கருத்தை கூறி நிரூபித்தல் ஏற்புடையது ஆகும்.
(இந்த விஷசமா அல்லது அந்த விஷமா?)

**Sec – 47** கையெழுத்து நிபுணத்துவம் தொடர்பானவை (Relevant) ஏற்புடையது (Cupled 45 Speciman Handwritting)

***Sec 47A** மின்னனு கையொப்பம் நிரூபணம் ஏற்புடையது

**Sec – 48** Right Custom
உரிமை வழக்காறு
தொடர்பானவை ஏற்புடையது ஆகும் (Coupled 13)

***Sec – 49** வழக்கங்கள், கொள்கைகள் மீதான கருத்துக்கள் ஏற்புடையது.

குழூக்குறி – பறி, நூல்

(உதாரணம்) வெங்கடாஜலபதி துணை – ஜஜ ரூ–55

(உதாரணம்) வல்லடை – திருட்டு (இராம்ஜிநகர்)

**Sec – 50** உறவு முறைகள் மீதான கருத்து ஒரு வழக்கில் ஒரு பையனும், பெண்ணும் சில நாட்கள் ஒரு வீட்டில் இருந்தபோது கணவன் மனைவி மாதிரி நடந்து கொண்டார்கள் என்று ஒரு நபர் தரும் சாட்சியம் ஏற்புடையது. (உதாரணம்) Indian Divers Act (Sec 494, 495, 497, 498 IPC வழக்குகளில் ஏற்புடையது கிடையாது)

(அள்ளமால் குறையாது, தீயில்லாமல் புகையாது)

***Sec – 51** Expert Opinion

D.N.A. Test Perfect Science

Super Imposition

எந்த காரணங்களில் வந்தது என வல்லுநர் கூறினால் அதுவும் ஆவணம் ஏற்புடையது ஆகும்.

**Sec – 52** உரிமை வழக்குகளில் (Civil) ஒருவர் குணநலன்கள் ஏற்புடையதல்ல Civil

***Sec – 53** குற்றவழக்குகளில் ஒருவர் நற்குணங்கள் தொடர்புடையதாகும் (இவன் ரொம்ப நல்லவன்)

***Sec 53A** சில சூழ்நிலைகளில் நடந்த பாலியல் அனுபவம் பற்றி கேள்வி கேட்க கூடாது.

***Sec – 54** குற்றவழக்கில் ஒருவர் நல்லவர் என்று சாட்சியம் அளித்திருந்தால் இவர் தீய குணம் உற்றவர் என சாட்சியம் விடலாம். (ஏற்புடையது ஆகும்) (53 IEA க்கு எதிர்)

***Sec – 55** சிவில் வழக்கில் ஒருவர் இழப்பீடு பெற நல்லகுணம் என்பது ஏற்புடையது ஆகும். Mcop (52 க்கு எதிர்)

## Part 2

# Chapter – 3

### மெய்ப்பிக்கப்படத் தேவையில்லாத நிகழ்மைகள்

***Sec – 56** நீதி முறை துணி வேற்பு, நீதிமுறையில் நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டிய விஷயங்கள் மெய்ப்பிக்கப்பட தேவையில்லை.

***Sec – 57** எந்தெந்த பொருண்மைகள் தொடர்பாக நீதிமன்றம் துணிவு ஏற்பு எடுத்துக்கொள்ளலாம்.

1) இந்திய மண்டலத்தில் அமலில் உள்ள சட்டங்கள்
2) United Kingdom சட்டங்கள்
3) இந்திய முப்படைகள் ஒழுங்குமுறை விதிகள்
4) இந்திய அரசியல் நிர்ணய சபை அமலின்படி பாராளுமன்றம் சட்டமன்றங்கள் நடப்புமுறை
5) கிரேட் பிரிட்டன் அயர்லாந்து மன்னர் கையொப்பம்
6) இங்கிலாந்து நீதிமன்ற நீதிமுறை
7) மாநில அரசிதழ்கள் அறிவிக்கை
8) இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட அரசு அல்லது முடியரசு நாட்டுக்கொடி
9) காலத்தின் பிரிவுகள் உலகின் புவியியல் விழாக்கள், நோன்புகள், விடுமுறைகள்
10) இந்திய அரசின் மண்டலங்கள்
11) இந்திய அரசு (or) மக்கள் குழுவுக்கும் இடையே நடந்த பூசல்களின் தொடக்கம் முடிவு

12) நீதிமன்ற உறுப்பினர்கள் கட்டளை நிறைவேற்றம். செயல்பாடுகள் அட்டார்னிகள், வாதுரைஞர்கள், அதிகாரம் அளிக்கப்பட்டவர்கள் பெயர்கள்.

13) நிலத்தின்மீது அல்லது கடலில் செல்வதற்கான பாதைவிதி, பொது வரலாறு, இலக்கியம், அறிவியல் அல்லது கலைபற்றிய செய்திகள் நீதிமன்றத்திற்கு துணைபுரியக் கூடிய தகவல் தரும் நூல்களையோ ஆவணங்களையோ நாடலாம்.

**விளக்கம்**

1952 க்கு முன்பு அரசியல் நிர்ணய சபை

09.12.1946ல் முதல் கூட்டம் (சுதந்திரத்துக்கு முன்பு)

11.12.1946 ல் தலைவர் Dr.இராஜேந்திரபிரசாத்

சட்டம் Drafting Commitle – 7 பேர்கள் Dr. அம்பேத்கார் உட்பட

15.08. 1947 சுதந்திரம்

29.08.1947 அரசியல் சட்டம் எழுத

26.11.1949 Law day, Citizen, Election

**Article 394**

26.01.1950 இந்திய அரசியல் சட்டம் செயல்பாடு

இந்திய அரசு அங்கீகரிக்கப்பட்ட கொடிகள்

**Schedule**

28 மாநிலம்

7 யூனியன் கடல்வழி

(1)Capital சாலைவழி

**Sec – 58** மேற்கண்ட அமலில் உள்ள வாதுரை விதிகள்படி சங்கதி எதுவும், நடவடிக்கை எதிலும் மெய்ப்பிக்கப்பட தேவையில்லை. ஆனால் ஏற்புரை விதிகள் அல்லாமல் வேறுவிதமாக

மெய்ப்பிக்கப்படவேண்டும் என்று நீதிமன்றம் தன் விருப்பம் போல் கேட்கலாம்.

## Chapter – 4

### <u>வாய்மொழி சாட்சியம்</u>

*Sec – 59 ஆவணங்களின் உள்ளடக்கம் தவிர மற்ற யாவையும் வாய்மொழி சாட்சியம் மூலமாக மெய்ப்பிக்கப்படலாம்.

*Sec – 60 கேள்வி சாட்சியம்

## Chapter – 5

### <u>ஆவண சாட்சியம்</u>

***Sec – 61** நீதிமன்றத்தில் ஆய்வுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்கள்

***Sec – 62** Primary Evidence (or) தலைநிலை சான்று (or) முதல் நிலை சான்று என்பது அந்த ஆவணமேதான்

1. Counter Parts (உதாரணம்) Agreement
2. Uniform Process (உதாரணம்) லித்தோகிராபி, கல் அச்சு, புகைப்படம் Printing

   (Hospital Intimation)

***Sec – 63** Secondary Evidence

இரண்டாம் நிலை சாட்சியம்

1. Certified Copy சான்றளிக்கப்பட்ட நகல்
2. Copies Made by mechanical Process இயந்திர செயல்முறையில் (Xerox)
3. மூலத்தோடு ஒப்பீடு செய்யப்பட்டவை

4. இருவர் ஒப்பந்தத்தில் ஒருவர் கையெழுத்து இன்னொருவர் பற்றிய விபரம் உள்ளவை
5. அக்ரிமெண்ட் Execution ஐ பார்த்தவர் தரும் சாட்சியம் (வாய்மொழியாக)

***Sec – 64** பொதுவிதி General Rule

ஒரு ஆவணத்தை பொறுத்தவரை Primary Evidence மூலமாகத்தான் நீதிமன்றத்தில் நிரூபிக்கவேண்டும்.

***Sec – 65** எந்த சூழ்நிலையில் Secondary Evidence அனுமதிக்கப்படுகிறது **?**

1. Primary Evidence எதிர்தரப்பினர் வசம் இருக்குமேயானால்
2. எதிர்தரப்பு ஆவணத்தை ஆஜர்படுத்த மறுக்கும் சமயம்
3. 66 IEA படி கோர்ட் நோட்டீஸ் அனுப்பியும் தாக்கல் செய்ய மறுக்கும்போது
4. எதிர்தரப்பினர் ஒத்துக்கொள்ளப்பட்ட ஆவணமாக இருந்தால்
5. அசல் ஆவணம் தொலைந்து (or)அழிந்து போய்விட்டால்
6. மூல ஆவணம் எளிதாக நகர்த்த முடியாத அளவுக்கு இருந்தால்
7. சான்றிட்ட நகல் சட்டத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தால்
8. பொது ஆவணங்கள் (or) Public Document
9. வசதியாக ஆய்வு செய்யப்பட முடியாத ஆவணமாக மூல ஆவணம் இருந்தால், Secondary Evidence அனுமதிக்கப்படுகிறது.

***Sec 65A** Information Technology Act 2000

***Sec 65B** மின்னனு தொடர்பான ஆவணங்கள் **17.10.2000** முதல் நடைமுறைக்கு வந்தது

**Sec – 66** 1. மூல ஆவணம் எதிர்தரப்பினரிடம் இருந்தால் கோர்ட் நோட்டீஸ் கொடுத்து வரவழைக்கலாம்.

2. ஆவணத்தை முன்னிலைப்படுத்த கோரப்படலாம் என எதிர்தரப்பினர் அறிந்திருக்கும் போது
3. அசல் ஆவணத்தை எதிர்தரப்பு மோசடி செய்தோ (or) வன்முறை வழியாகவோ பெற்றிருந்தால்
4. எதிர்தரப்பு மூல ஆவணத்தை கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கும்போது
5. எதிர்தரப்பினர் மூல ஆவணம் தொலைந்து போனதை ஒப்புக்கொண்டிருக்கும்போது
6. அந்த அசல் ஆவணத்தை வைத்திருப்பவர் நீதிமன்ற கட்டளைக்கு எட்டாதவராக இருக்கும்போது
   (உதாரணம்) (வெளிநாடு)

கோர்ட் நோட்டீஸ் அனுப்பத் தேவையில்லை

***Sec – 67** ஒரு ஆவணத்தில் உள்ள கையெழுத்தை (or) கையொப்பம் எவ்வாறு நிரூபிப்பது யார் எழுதினாரோ யார் கையெழுத்து போட்டாரோ அவர் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கலாம்.

Coupled section 45 to 51, 47, 47A, 67, 73

**Sec 67A** 2008 ஆம் வருடம்

Digital Signature

Electronic Signature

**Sec – 68** ஒரு ஆவணம் சட்டப்படி சான்று கையொப்பம் இடப்படவேண்டும் எவ்வாறு நிரூபிப்பது **?**

சான்று கையொப்பம் இட்டவர்களில் ஒருவரையாவது விசாரிக்க வேண்டும்

Indian Registration Act 1908

சான்று கையொப்பமிட்டவரை நிரூபிக்கதேவை இல்லை

**(விதிவிலக்கு) :**

உயில் எழுதியிருந்தால் சான்று கையொப்பம் இட்டவரை நிரூபிக்க வேண்டும்

**Sec – 69** சான்று கையொப்பம் இட்டவரை கண்டுபிடிக்கமுடியாமல் இருந்தால் என்ன செய்வது ?

ஆவணத்தை எழுதிக் கையொப்பம் இட்டவர் மூலமாக நிரூபிக்கவேண்டும்

**Sec – 70** ஆவணத்தை தரப்பினரே ஒத்துக்கொண்டால் அதே நிரூபணம் ஆகும்

**Sec – 71** ஆவணத்தில் சான்று கையொப்பம் இட்டவர். தன் கையெழுத்து இல்லை என மறுத்தால் ஆவணத்தை எப்படி நிரூபிப்பது**?** வேறு சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கலாம்.

**Sec – 72** Attestation (சான்று ஒப்பம்) தேவைப்படாத ஆவணத்தில், சான்று ஒப்பம் செய்யப்பட்டு இருந்தால் கூட அந்த ஆவணத்தை சான்றொப்பம் இடப்படாத ஆவணம் போன்றே நிரூபிக்கலாம்.

**Sec – 73** 1. ஒருவர் கையெழுத்து, கைரேகை இவைகளை நீதிமன்றமே ஒப்பீடு செய்து நிரூபணம் செய்யலாம்

**2.** நீதிமன்றம் தன் முன்பு கையெழுத்து எழுதச்சொல்லிக்கூட Open Court ல் Compare செய்யலாம்.

**3.** இது கைரேகைக்கும் பொருந்தும்

(நீதிமன்றத்தின் அதிகாரம்)

**Sec 73A** மின்னணு (இலக்க முறை)

***Sec – 74** Public Document (or) பொது ஆவணம் என்றால் என்ன **?**

***Sec – 75** Private Document (or) தனியார் ஆவணம் எனறால் என்ன **?**

***Sec – 76** சான்றிட்ட நகல் என்றால் என்ன **?**

ஒரு பொது அதிகாரி வசம் உள்ள ஆவணத்தை நகல் எடுத்து கையொப்பம் முத்திரை இட்டு உண்மைநகல் என குறிப்பிடவேண்டும். (Attested True Copy)

**Sec – 77** பொது ஆவணங்களை சான்றிட்ட நகல் மூலம் நிரூபிக்கலாம் (GD Attested True Copy)

**Sec – 78** Other Official Document உயிலை சாட்சி கையெழுத்து இட்டவர் மூலம் நிரூபிக்கலாம்.

**Sec – 79** சான்றிட்ட நகலை உண்மை தன்மையாக அனுமானம் கொள்ள வேண்டும் - Shall Presume

***Sec – 80** 164 குவிமுச படி JM ஒருவர் எதிரி (or) சாட்சியிடம் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிரூபிக்க சாட்சியாக கூப்பிடக்கூடாது. Shall Presume

***Sec – 81** Gezelte, News Paper நாடாளுமன்ற சட்டங்கள் – Shall Pressume

***Sec 81A** மின்னனு - Shall Presume

**Sec – 82** இங்கிலாந்து ஆவணம் – Shall Presume

**Sec – 83** அரசு Map, Plans - Shall Presume

**Sec – 84** சட்டங்கள் தொகுப்பு மற்றும் தீர்ப்புநகல் அறிக்கைகள் குறித்த அனுமானம் – Shall Presume

**Sec – 85** Power of Army Notary Public Judicial Magistracies மூலம் தயார் செய்யப்பட்ட ஆவணம் – Shall Presume

**Sec – 85 (A,B,C)** மின்னனு – Shall Presume Judicial

**Sec – 86** அயல்நாட்டு சான்றளிக்கப்பட்ட நகல் – May Presume

இந்திய அரசு நகல் – Shall Presume

**Sec – 87** அரசு புத்தகம் நிலப்படம் நகல் – Shall Presume

தனியார் நகல் – May Presume

**Sec – 88** தந்திவாசகம் / தந்தியாக அனுப்பப்பட்டது. – May Pressure

யார் அனுப்பினார்கள் என்பதற்கு Prescription கிடையாது

வாசகத்திற்கு Prescription உண்டு

**Sec – 89** முறைப்படி நிறைவேற்றியதாக முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணம்

- Shall Presume (உதாரணம் 82 CRPC) Summan (எதிரி அசல் ஆவணத்தை தாக்கல் செய்ய வில்லை Secondary ஆவணத்தை வாதி தரப்பில் தாக்கல் செய்தார் Original ஆக அனுமானம் கொள்ள வேண்டும்.

**Sec – 90** Assian Document

1. 30 years Age ஆவணம்
2. Proper custody
3. Genune பற்றி – May Presume

**Sec 91A** மின்னனு ஆவணங்கள் 5 வருடங்கள்

## Chapter – 6

### பத்திரசாட்சியத்தால் வாய்மொழிச் சாட்சியம் நீக்கப்படுதல் பற்றி

**Sec – 91** ஒரு ஒப்பந்தம், கொடை, சொத்து பற்றி ஆவண வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கும்போது , மெய்ப்பிக்க அசல் (or) இரண்டாம் தர சாட்சியமன்றி வேறு எந்த சாட்சியமும் கொடுக்கப்படுதல் ஆகாது. (ஆவணம் மூலம் நிரூபணம்)

**Sec – 92** ஆவணமன்றிலும் வாய்மொழி சாட்சியம், தரக்கூடாது (செல்லாது) ஆனால் எப்போது விளக்கப்படவேண்டும் ?

**விதிவிலக்கு**

1. Exclusion of evidence of oral agreement ஆவணத்தை செல்லாநிலை ஆக்கக்கூடிய பொருண்மைகள்
2. ஆவணத்தோடு முரண்படாத வாய்மொழி உடன்பாடு

   (உதாரணம்) காலையில் பொருள் தரவேண்டும் இல்லையெனில் மாலையில் பணம் தரவேண்டும். இது ஆவணத்தில் எழுதப்படாத வாய்மொழி உடன்பாடு (லாரி காப்பீடு செய்யப்பட்டுள்ளது, லாரி பொருளுடன் திருட்டு போனால் காப்பீடு கொடுத்தாக வேண்டும்)
3. முன்நிபந்தனை தொடர்பான விபரங்கள் நிரூபிக்கலாம்

   (உதாரணம்) X க்கும் Y க்கும் திருமணம் நடந்தால் இந்த Agreement செல்லும்
4. ஆவணத்தை தள்ளுபடி செய்ய அல்லது மாற்றியமைக்க பின்னால் ஏற்பட்ட வாய்மொழி உடன்பாடு
5. பழக்கவழக்கம் – Custom usage (குனிநபர் கூட்டம்)

**விதிவிலக்கு**

Sec – 25 Indian Contract Act ல் Consideration இல்லையென்றால் Contract இல்லை

6. இருக்கும் பொருண்மைகளுக்கு ஒரு ஆவணத்தின் வாசகம் எந்த முறையில் தொடர்புடையது என்று காட்டுகிற பொருண்மைகள்.

**Sec – 93** ஒரு ஆவணத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வாசகங்களில் ஐயம், குறை தோன்றினால் நிறைவு செய்யும் சங்கதிகள் பற்றிய சாட்சியம் கொடுக்கப்படலாகாது (உதாரணம்) ஓர் ஆவணத்தில் வெற்றிடங்கள் இருக்கின்றன. அவற்றை எவ்வாறு நிரப்பவேண்டும் என்று எண்ணப்பட்டது என்பது பற்றிய சாட்சியம் அளித்தல் ஆகாது. (ஏற்கப்படாது)

| <u>Ambiguty</u> | <u>Tv வெளிப்படையானது</u> | <u>உட்கிடையானது</u> |
|---|---|---|
| தெளிவின்மை | வெளி கண்ணாடி உடைந்தது | உள் கருவிகள் (Picture Tube) |
| Patent Defect | Picture Tube Latent Defect | |

(உதாரணம்) டயர் கிழிதல் உள் ட்யூப் கிழிதல்

**Sec – 94** ஆவணத்தில் பயன்படுத்தப்பட்ட வாசகம் தெளிவு, சூழ்ந்துள்ள சங்கதி சரியாக இயங்கும் போது இது கருதப்படவில்லை என சாட்சியமளிக்கலாகாது. (உதாரணம்)குறித்த இடத்தின் சொத்து – இதே போன்ற வேறோர் இடத்தின் சொத்து (ஏற்கப்படாது)

**Sec – 95** ஒரு ஆவணத்தில் பயன்படுத்தப்பட்ட வாசகம் தெளிவாக இருந்து, பொருள் தராதிருந்தால் தனிப்பட்ட பொருண்மை என விளக்கி சாட்சியம் தரலாம். (உதாரணம்) கந்தப்பன் கல்கத்தாவீடு – ஹெளராவீடு சாட்சியம்விடலாம் (ஊர்மாற்றி சொல்வது ஏற்க்கப்படும்)

**Sec – 95** Electronic Record

**Sec – 96** (எனக்கு இரண்டு வெள்ளைக்குதிரை உள்ளன)
எனது வெள்ளைக்குதிரையை ரூ.1,000/– க்கு தருகிறேன் என அக்ரிமெண்ட் எந்த வெள்ளைக்குதிரை என சாட்சியம் கொடுக்கலாம். (சாட்சியம் விடலாம்)

**Sec – 97** A என்பவர் B என்பவரிடம் ஒப்பந்தம் Y என்பவர் அனுபத்தில் உள்ள X என்ற இடத்தில் உள்ள எனது நிலத்தை விற்பனை செய்கிறேன் – அக்ரிமெண்ட் X என்ற இடத்தில் நிலம் உள்ளது அனுபவத்தில் ஆனால் Y வசம் இல்லை சாட்சியம் விடலாம் (ரோடு ஓரம் நிலம் சாட்சியம் விடலாம்)

**Sec – 98** தெளிவற்ற வாசகங்கள் மீதான பொருள் கொள்ளுதல் (உதாரணம்) என்னுடைய மாடல்களையெல்லாம் ரூ.1000/– தருகிறேன் மாடல்கள் மட்டுமா + Imstrument சேர்த்தா ? சாட்சியம் விடலாம்

**Sec – 99** ஒரு ஆவணத்தில் எழுதப்பட்ட விஷயங்களுக்கு முரண்பாடாக யார் சாட்சியமளிக்கலாம் ?

அந்த ஆவணத்தில் கையெழுத்திட்ட நபர்கள் சாட்சியமளிக்கமுடியாது. ஆனால் மூன்றாவது நபர் சாட்சியமளிக்களாம் (உதாரணம்) ஆறுமுகம் கந்தனிடம் பஞ்சு முட்டைகளை ஒப்புவித்ததும் பணம் தந்து விடவேண்டும் என எழுத்து அக்ரிமெண்ட். ஆனால் 3 மாதங்களுக்குள் பணம் தருவதாக வாய்மொழி ஒப்பந்தம் ஆகும். இதில் ஆறுமுகமும் கந்தனும் சாட்சியம் அளிக்கமுடியாது. முன்றாவது நபரான வேலன் சாட்சியமளிக்கலாம்.

*Sec – 100 ஒரு உயிலைப் பொறுத்தவரை இந்திய சாட்சிய சட்டம் செல்லாது Indian Substance Act இந்திய வழியுரிமை சட்டம்தான் முன்னிற்கும் (உதாரணம்) Major Act ஐ Special and Local Laws வெற்றி கொள்வதைப்போல்)

# Part 3

## Chapter – 7

<u>மெய்ப்பிக்கும் சுமை பற்றி</u>

### Burden of Proof

***Sec – 101** Civil (or) Criminal Case one Party asserts Where as Other Party Denied யார் எந்த விஷயத்தை சொல்கிறாரோ அந்த தரப்புதான் அதை நிரூபிக்கவேண்டும். (Burden)

***Sec – 102** ONUS of Proof

A.B இருதரப்புக்கு வழக்கு நடக்கும் போது இருவரும் சாட்சியம் விடவில்லை என்றால் யார் தோற்றுப்போகிறோரோ அவர்தான் நிரூபிக்கவேண்டும். (உதாரணம்) வன்புணர்ச்சி வழக்கில் பெண்ணின் சம்மதம் இருந்தது என்பதை குற்றம் சாட்டப்பட்டவர்தான் நிரூபிக்கவேண்டும்.

**Sec – 103** குறிப்பிட்ட சங்கதியை நிரூக்கும் பொறுப்பு இவரைச் சார்ந்தது என நீதிமன்றம் நினைக்கும்போது அவர் அதை நிரூபிக்கவேண்டும். (உதாரணம்) குறிப்பிட்ட காலத்தில் தாம் வேறோர் இடத்தில் இருந்தார் என்பதை நீதிமன்றம் நம்ப வேண்டும் என கருதும்போது நிரூபிக்கும் சுமை இவரை சார்ந்தது. (ONUS) 11 IEA (102 போல)

**Sec – 104** ஒரு மரணவாக்குமூலத்தை நிரூபிக்க வேண்டும் என நினைத்தால் அவர் இறந்து போய்விட்டார் என்பதை முதலில் நிரூபிக்கவேண்டும். (101 போல)

***Sec – 105** Chapter – 4 Exception பொதுவான விதிவிலக்குகளை (76 இதச முதல் 106 இதச வரை) எதிரிதான் நிரூபிக்கவேண்டும். (ONUS)

***Sec – 106** ஜீவனாம்ச வழக்கில் கணவன் சம்பளத்தை கணவன்தான் நிரூபிக்கவேண்டும். ரயிலில் டிக்கெட் எடுத்தவர் தான் (பயணி) டிக்கெட் பரிசோதகரிடம் டிக்கெட் எடுத்ததுபற்றி நிரூபிக்கவேண்டும். (ONUS)

***Sec – 107** ஒருவர் உயிருடன் உள்ளாரா **?** **<u>இறந்துவிட்டாரா</u> ?** என கேள்வி 30 ஆண்டு காலத்திற்குள் உயிருடன் ஒருவர் இருந்திருப்பதாக காட்டப்படும்போது அவர் இறந்துவிட்டார் என்பதை இறந்துவிட்டார் எனக் கூறுபவர் தான் நிரூபிக்கவேண்டும். (Burden)

***Sec – 108** ஒருவர் **<u>உயிருடன் உள்ளாரா</u> ?** இறந்து விட்டாரா **?** என கேள்வி

Provided ஒருவர் இறந்து விட்டதாகவும் அவரை பார்த்து 7 ஆண்டு காலம் ஆகிவிட்டது என மெய்ப்பிக்கப்படும்போது அவர் உயிருடன் தான் இருக்கிறார் என உறுதியாக கூறும் போது உயிருடன் இருப்பதை மெய்ப்பிக்கும் சுமை உறுதியாக கூறுபவர் மீது மாற்றப்படும். (Onus)

**Sec – 109** இருவரும் நண்பர்களா ? அல்லது நில உடைமைதாரர், குத்தகைதாரர் அல்லது முகவர் என காட்டப்படும்போது மேற்கண்ட உறவு முறைகளில் தற்சமயம் இல்லை அல்லது இதற்கு முன்பும் அந்த உறவு முறையில் இருந்திருக்கவில்லை என நிரூபிக்கும் சுமை உறுதியாக உரைப்பவரை சார்ந்ததாகும். (ஜெயலலிதா சொத்து – தீபா பெங்களூர் அமிர்தா) Burden of proof

**Sec – 110** ஒருவர் ஒரு பொருளுக்கு அனுபோக உரிமை உள்ளவரா ? (Possession) என நிரூபிக்கும் சுமை அனுபோக உரிமை உள்ளவரை சார்ந்ததாகும். (Possession 9 Point in Law) அனுபோக உரிமைக்கு முக்கியத்துவம் உள்ளது. (Onus)

**Sec – 111** இரு தரப்பினர்களில் ஒருவர் தீவிர நம்பிக்கைக்குரிய உறவு பூண்டு இருக்குமிடத்து நடவடிக்கைகளில் நல்லெண்ணத்தை நிரூபித்தல்.

(உதாரணம்) அட்டார்னி (Attorney) ஒருவருக்கு கட்சிக்காரர் ஒருவரால் செய்யப்பட்ட விற்பனை பிரச்சனைக்குரியதாக (உரிமை வழக்கில்) இருக்கும்போது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என அட்டார்னியை சார்ந்ததாகும். (Onus)

**Sec 111A** 120A, 122, 123 இதச வின் கீழான சதி செய்தல் அல்லது குற்றத்திற்கான முயற்சியை மேற்கொள்ளுதல் போன்ற குற்ற நிகழ்விடத்தில் நபர் இருந்ததாக நிரூபணம் இருந்தால் மேற்கண்ட குற்றங்களை அவர் செய்ததாக அனுமானித்தல் வேண்டும்.

(Shall Presume)

**Sec – 112** முறையான திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தை முறைப்படியானது என்பதற்கு முடிவான நிரூபணம் (Birth During Marriage Conclusive Proof of Legitimacy) ஒருவர் தன் தாய்க்கும் வேறொரு மனிதருக்கு மிடையில் செல்லத்தக்க மணவாழ்க்கை தொடர்ந்து இருந்து வரும்போது அல்லது அவர்களுக்கிடையிலான விவாகாரத்துக்குப் பின்னர் 280 நாட்களுக்குள்ளாகவும் அவர்கள் வேறொரு திருமணம் செய்து கொள்ளாத நிலையிலும் அவர் அவ்விரு நபர்களுக்கும் பிறந்தவராக கருதப்படுவார்.

**Sec – 113** 1935 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கசட்டத்தின் 3 வது பகுதியின் தொடக்கத்திற்கு முன்பு பிரிட்டிஷ் மண்டலத்தின் எப்பகுதியேனும் ஓர் அரசர் அல்லது மன்னருக்கு கொடையாக அளிக்கப்பட்டது என்பது உறுதியான நிரூபணம் ஆகும். (இந்த பிரிவு செயல்பாட்டில் இல்லை).

***Sec 113A** திருமணமான பெண் ஏழாண்டுகளுக்குள் தற்கொலை செய்து கொள்ள உடந்தையாக இருத்தல் கணவர் அல்லது உறவினர் கொடுமைப்படுத்தியதால் தற்கொலை செய்து கொண்டிருக்கவேண்டும் என அனுமானிக்கலாம்.
(கொடுமையிழைப்பு என்பது 498 A இதச பொருளைக் கொண்டிருக்கும்) – May Presume

***Sec 113B** வரதட்சணை மரணமாக அனுமானித்தல் ஒரு பெண் திருமணமான 7 ஆண்டுகளுக்குள் தற்கொலை செய்து கொண்டு இருந்தால் அந்தப் பெண் வரதட்சனை கொடுமையாலே இறந்திருக்கவேண்டும் என அனுமானிக்க வேண்டும். (வரதட்சனை மரணம் – 304 B இதச பொருளைக் கொண்டிருக்கும்) (Soon before her death) - May

Presume (15 நாட்களுக்கு முன்பாக பிரச்சனை நடந்திருக்க வேண்டும்)

***Sec 114** நிகழ்நிலையிலுள்ள சில சங்கதிகளை நீதிமன்றம் அனுமானிக்கலாம் May Presume இயற்கையான நிகழ்ச்சிகள், மனித நடத்தை பொதுவான நடவடிக்கைகள் என அனுமானிக்கலாம்.

(உதாரணம்) திருட்டுப்பொருளை தம் வசம் வைத்துள்ளவர் அதற்கு சரியான காரணம் காட்டாதபோது அவர் திருடனாக இருக்கலாம் (or) திருட்டுப் பொருளை வாங்கியிருக்கலாம் என அனுமானிக்கலாம். (411 IPC)

***Sec 114A** பாலியல் தாக்குதல் சம்மந்தமான சில குறிப்பிட்ட குற்றச்சாட்டில் பாதிப்புக்குள்ளான பெண் பாலியல் ஒப்புதல் இன்மை என நீதிமன்றம் அனுமானிக்கவேண்டும். பெண்ணின் ஒப்புதல் இருந்தது என்பதை குற்றவாளி தான் நிரூபிக்கவேண்டும். Imre AIR 1979 துக்காராம் W/s மகாராஷ்டிரா Supreme Court Page 185 03.02.2013 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. (ONUS)

# Chapter – 8

## முரண்தடை

**<u>முரண்தடை (or) மறுப்புத்தடை (Estoppel)</u>**

***Sec – 115** ஒருவர் தமது சொல், செயல் அல்லது செய்யாது விடுத்தல் மூலமாக ஒரு விஷயத்தை முதலில் நம்பச் செய்து பிறகு அதை மாற்றியுரைத்தல் கூடாது. (உதாரணம்) ரயிலில் புக்செய்யப்பட்ட உர மூட்டைகள் ரூ.1000/– என முதலில் குறிப்பிட்டுவிட்டு ரயில் விபத்துக்குள்ளாகி உர மூட்டைகள் தண்ணீரில் மூழ்கிய பின்பு மதிப்பு ரூ.5,000/– என (நஷ்ட ஈடுபெற) மாற்றி உரைக்கக்கூடாது.

**Sec – 116** ஒரு நபர் சொத்தில் ஒருவர் குத்தகைக்கு குடியிருக்கும்போது உரிமையாளரின் உரிமையை மறுக்கக்கூடாது – Estoppel

***Sec – 117** ஒரு நபர் லைசென்ஸ் Will of Exchange ஐ மறுக்கக்கூடாது (31 IEA Cuppled with section) Admission என்பது Conclusive Proof இல்லை. ஆனால் இது Estopeel ஆகவும் செயல்படும். நான் வாகனத்தை <u>வேகமாக</u> ஓட்டிச்சென்றேன் – Confession இல்லை நான் <u>என்வாகனத்தை</u> ஓட்டினேன் – இது ஏற்புரை

## Chapter – 9

### சாட்சிகள் பற்றி

***Sec – 118** யார் சாட்சியம் அளிக்கலாம் **?**

யார் வேண்டுமானாலும் சாட்சியம் அளிக்கலாம். பைத்தியம் கூட சாட்சி அளிக்கலாம். கேள்வியை புரிந்து கொண்டு சாட்சியமளிக்கும் தகுதி பெற்றிருக்கவேண்டும். (வயது பொருட்டல்ல)

(Except Dead Body)

***Sec 119** வாய்பேச முடியாதவர் கூட சாட்சியம் அளிக்கலாம். எழுத்து மூலமாக கையெழுத்து இட்டு (திறந்த நீதிமன்றம்) சைகை மூலமாகவும் சாட்சியம் அளிக்கலாம். இது வாய்மொழி சாட்சியமாக கருதப்படும்.

**Sec – 120** உரிமையியல் வழக்கு, குற்றவியல் வழக்குகளில் கணவன் அல்லது மனைவி தகுதிவாய்ந்த சாட்சியாக இருப்பார்.

**Sec – 121** Previlaged Communication

நீதிமன்ற நடவடிக்கை பற்றி சாட்சியம் அளிக்க கட்டாயப்படுத்தக்கூடாது. (ஆனால் மேல் நீதிமன்ற உத்தரவின்படி கட்டாயப்படுத்தலாம்)

***Sec – 122** கணவன் மனைவிக்குள்ளே நடந்த தகவல் பரிமாற்றம் பற்றி சாட்சியம் அளிக்க கட்டாயப்படுத்தக்கூடாது. ImRe (ஆட்டோ சங்கர் கேஸ்) மனைவி என்பது வேறு Mrs என்பது வேறு 1994 CLJ Page 3071

**Sec – 123** வெளியிடப்படாத அலுவலகக் குறிப்பேடுகள் பற்றி யாரும் சாட்சியமளிக்கப்படக்கூடாது (தேசப்பாதுகாப்பு காரணமாக) (விதிவிலக்கு) மேல் அலுவலர் மூலம் கோரலாம்.

***Sec – 124** அலுவலக ரகசியம் பொது அதிகாரி எவரும், பொது நலன்கள் பாதிக்கப்படும் என்றபோது அவரை சாட்சியம் அளிக்க கட்டாயப்படுத்தக்கூடாது.

***Sec – 125** ஒரு நடுவர், காவல்துறை அதிகாரி, வருவாய்த்துறை அதிகாரி இவர்கள் குற்றம் பற்றிய ஒரு தகவலை எங்கிருந்து பெற்றார் என்று சொல்லுமாறு நீதிமன்றம் கட்டாயப்படுத்தக்கூடாது.

**Sec – 126** ஒரு கட்சிக்காரர் வக்கீலிடம் தொழில்முறையில் தெரிவிக்கப்படும் செய்திகள் தம்மிடம் கூறிய செய்திகளை வெளியிடக்கூடாது. பாரிஸ்டர், அட்டர்னி, வாதுரைநர் (வக்கீல்) (சட்டமுரனான ஆலோசனைகளுக்கு பொருந்தாது)

**Sec – 127** வக்கீல் போன்றே அவரது உதவியாளரிடமும் மொழி பெயர்ப்பாளரிடமும் தெரிவிக்கப்பட்ட செய்திகளை வெளியிடக்கூடாது.

**Sec – 128** சாட்சியத்தை தாமாக முன்வந்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருந்தால் பாரிஸ்டர் அட்டர்னி, வாதுரைநர் சாட்சியாக செயல்படலாம். (பிரிவு 126 இதற்குபொருந்தாது)

**Sec – 129** சட்ட ஆலோசகர்களிடம் பரிமாறிக் கொண்ட செய்திகளை ஒருவர் தாமே முன்வந்து சாட்சியமாக அளிக்கிறேன் என்று முன்வந்தால் அன்றி சாட்சியமளிக்க கட்டாயப்படுத்துதல் கூடாது. (Cupled 123)

**Sec – 130** <u>தரப்பினராக இல்லாத சாட்சியின் பாத்தியதை ஆவணங்களை தாக்கல் செய்தல்</u> ஓர் உரிமை வழக்கில் தரப்பினர் அல்லாத எவரையும் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யுமாறு கட்டாயப்படுத்தல் கூடாது.

**Sec 131** மின்னனு பதிவு ஆவணம் எதையும் 130 பிரிவில் சொன்னவாறு கட்டாயப்படுத்துதல் கூடாது. (இது தகவல் தொழில் நுட்பச்சட்டம் 2000 இணைக்கப்பட்டது 17.10.2000 நாள் முதல் அமலுக்குவந்தது.

**Sec 132** ஒரு சாட்சியை சாட்சி சொல்ல 146, 147 கட்டாயப்படுத்தலாம். ஆனால் சாட்சி சொல்வதால், அவரை தண்டஇழப்புக்கு உள்ளாக்க கூடாது.

***Sec 133** கூட்டுக்குற்றவாளி Accomplice (சேர்ந்து குற்றமிழைப்பவன்) சேர்ந்து குற்றமிழைத்துவிட்டு தான் மட்டும் சாட்சியாக மாறிக்கொள்பவன்

<u>அப்ரூவர்.</u> <u>(Coupled Section)</u>

133 – அப்ரூவருக்கு Corrabaration தேவையில்லை Rule of law

113 – அப்ரூவருக்கு Corrabaration வேண்டும் Rule of Evidence

ImRe : Dagudu v/s state, AIR 1997 Supremecourt 1579

(Cupled 30 IEA, 306 CRPC)

***Sec 134** ஒரு வழக்கில் ஒரு சாட்சிபோதும், Rioting Case ல் குறைந்தது இரண்டு சாட்சி வேண்டும்.

ImRe : Masala AIR 1965 Supreme court Page 202

<u>ஒரு சாட்சியை எவ்வாறு அனுகுவது?</u>

ImRe: வடிவேல் தேவர் வழக்கு 1957 VOL – I MLJ Criminal Page 75 (வழக்கை நிரூபிக்க இந்தனை சாட்கிள் எண்ணிக்கை என்ற அவசியமில்லை.)

## Chapter – 10

### சாட்சிகளை விசாரித்தல் பற்றி

**Sec 135** எந்த வரிசை முறையில் சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டும் என உரிமை வழக்கு, குற்ற வழக்கு ஆகியவைகளில் குற்றவழக்கு நடைமுறை சட்டப்படியோ, நீதிமன்றத்தின் விருப்பப்படியோ முறைப்படுத்தலாம். (List of Witness என்று காவல்நிலையத்திலும் Prosecution Witness என்று நீதிமன்றத்திலும் கூறப்படும்)

***Sec 136** (Coupled Sec 5 IEA) சாட்சியம் அனுமதிக்கத்தக்கதா? என்பது பற்றி நீதிபதி தீர்மானிப்பார் பிரச்னையில் உள்ள சங்கதி Fact in Issue தொடர்புடைய சங்கதிகள் Relavant Fact இதில் ஏதேனும் ஒன்று பற்றித்தான் சாட்சியம் அளிக்க முடியும்.

***Sec 137** ஒரு சாட்சி அவரை அழைக்கும் தரப்பினரால் விசாரிக்கப்படும் போது முதல் <u>விசாரணை</u> எனப்படும். ஒரு சாட்சி எதிர்தரப்பினரால் விசாரிக்கப்படும் போது அது <u>குறுக்கு விசாரணை</u> எனப்படும். ஒருசாட்சி குறுக்கு விசாரைண செய்யப்பட்ட பின்பு அவரை அழைத்த தரப்பினரால் மீண்டும் விசாரிக்கப்படும் போது அது <u>மறுவிசாரணை</u> எனப்படும்.

**Sec 138** சாட்சிகள் முதலில் அழைத்த தரப்பினர் முதல் விசாரைணயும், அடுத்து குறுக்கு விசாரணையும், தரப்பினர் விரும்பினால் மறுவிசாரணையும் செய்யப்படுதல் வேண்டும்.

**Sec 139** நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டவர் ஒருபத்திரம் தாக்கல் செய்பவர் என்பதால் மட்டும் அவர் சாட்சியாவதில்லை அழைக்கபடும் வரையில் அவரை குறுக்கு விசாரைண செய்யப்படுதல் ஆகாது. 91 Crpc

***Sec 140** குண இயல்புக்கான சாட்சிகள் குறுக்கு விசாரணையும், மறுவிசாரணையும் செய்யப்படலாம். (114 A, 155, 146 காண்க)

***Sec 141** விடைபொதி வினாக்கள்

எதிர்பார்க்கும்பதிலை கேள்வியில் வைத்து கேட்டுப் பெறுவது விடைபொதி வினா ஆகும்.

***Sec 142** விடைபொதி வினா எப்போது கேட்கப்படக்கூடாது?

எதிர்தரப்பினர் கேட்கலாம். முதல் விசாரணை மறுவிசாரணையில் அவை கேட்கப்படக் கூடாது. மெய்ப்பிக்கப்பட்டிருக்கிற விபரங்கள் விடைபொதி வினாவில் வாதிதரப்பில் கேட்க நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும்.

***Sec 143** விடைபொதி வினாக்களை எதிர்தரப்பினர் கேட்கலாம்.

**Sec 144** பத்திரங்களின் உள்ளடக்கம் பற்றி மற்றவர்களால் செய்யப்பட்ட உரைகள் தாமே தொடர்புற்ற நிகழ்மைகளாக இருக்குமானால் அத்தகைய உரைகளைப் பற்றி சாட்சி ஒருவர் வாய்மொழி சாட்சியம் கொடுக்கலாம். (Agreement தவிர இடைதரகருக்கு எழுதிய கடிதம் மூலம் நிருபணம்)

***Sec 145** (Coupled With Sec 157 IEA) சாட்சி ஒருவரால் கொடுக்கப்பட்ட எழுத்து அல்லது உரை (சாட்சியம்) இவைகளை முரண்படுத்தி எதிர்தரப்பினர் கேள்விகளை கேட்கலாம். (குறுக்குவிசாரணை செய்யலாம்)

***Sec 146** (Coupled With Sec 155 IEA) சாட்சியிடம் குறுக்கு விசாரணையில்

எந்த மாதிரியான கேள்விகளை கேட்கலாம்?

1. Reliability - நம்பகத்தன்மை
2. Life Style – வாழ்க்கைமுறை
3. Credibility – நாணயத்தன்மை

பற்றி கேட்கலாம். இன்னொரு சாட்சி மூலம் முந்தைய சாட்சியத்தை குலைக்கலாம் 01.01.2003 ஆம் ஆண்டு சட்ட திருத்தத்தின் படி 376 IPC வழக்கில் சாட்சியை (பாதிக்கப்பட்டவர்) <u>பொது ஒழுக்கக் கேடு, பண்புநலன், </u>முந்தைய பாலியல் அனுபவம் (General Immoral Character) பற்றி 155 IEA பிரிவில் கேட்கலாம் என இருந்து நீக்கப்பட்டு, பிரிவு 146 IEA இந்தப்பிரிவில் கேட்கக்கூடாது என சேர்க்கப்பட்டுள்ளது.

***Sec 147** ஒரு சாட்சியை பதில் சொல்லுமாறு கட்டாயப்படுத்தலாம். ஆனால் பொய் சாட்சிய நடவடிக்கை தவிர பிரிவு 132 IEAல் சொல்லப்பட்டது போன்று சாட்சியின் முந்தைய குற்றங்களுக்கு கைது செய்யவோ, குற்றவழக்கு தொடர்தலோ, வேறு குற்றவழக்கில் இந்த சாட்சியத்தின் மூலம் மெய்பிக்கப்படுதலோ ஆகாது. (உம். மணல் திருட்டு)

**Sec 148** கேள்வி எப்போது கேட்கப்பட வேண்டும் என்பதையும் சாட்சி எப்போது பதிலளிக்கும்படி கட்டாயப்படுத்தப்படலாம் என்பதையும் நீதிமன்றம்தான் தீர்மானிக்கும்.

***Sec 149** சாட்சியை, நியாயமான அல்லது அடிப்படை இல்லாமல் கேள்வி கேட்கக் கூடாது. (உதாரணம்) (ஏற்கனவே நீ திருட்டுக் குற்றம் புரிந்து சிறை சென்றாயா? என்று கேட்டால் முந்தை வழக்கு விபரம்

வழக்கறிஞர் கையில் இருக்கவேண்டும் அப்படி இருந்தாலும் அதை ஆவணமாக சமர்ப்பிக்க இயலாது)

***Sec 150** சாட்சியிடம் வழக்கறிஞர் அடிப்படை இல்லாமல் கேள்வி கேட்டால் வழக்கறிஞர் மீது நீதிபதி உயர்நீதிமன்றத்திற்கோ அல்லது பார் கவுன்சிலுக்கோ புகார் எழுதலாம்.

**Sec 151** சாட்சியிடம், வழக்கறிஞர் அநாகரிகமான (Indecent) அவதூறான (Scandalous) கேள்விகளை கேட்கக்கூடாது. நீதிபதி தடை செய்யலாம். (உதாரணம்) நீ ஒருமாதிரியான ஆளா?

**Sec 152** சாட்சியிடம், வழக்கறிஞர் நிந்தனை (or) இன்னல் (Insult) தொல்லை (Annoy) தரும் கேள்விகளை கேட்கக் கூடாது. நீதிபதி தடைசெய்யலாம். (உதாரணம்) நீ அடிக்கடி பொய்சாட்சி கூற வருவாயா?

**Sec 153** வாய்மையை சோதிக்கின்ற கேள்விகளுக்கான பதில்களை முரண்படுத்தும் சாட்சியம் ஒதுக்கப்படுதல்.

(உதாரணம்) நீ லஞ்சம் வாங்கி டிஸ்மிஸ் ஆனாயா? சாட்சி மறுப்பார். அப்படி அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருந்ததற்கான ஆவணம் வழக்கறிஞரிடம் இருந்தாலும் அதை ஆதாரமாக சமர்ப்பிக்க முடியாது. (Perjury – யாக தனி நடவடிக்கை எடுக்கலாம்)

**Sec 154** <u>தரப்பினர் தம் சாட்சியை குறுக்கு விசாரணைக்குப் பின் கேள்வி கேட்டல்.</u> பிறழ்சாட்சி : சாட்சியால் குறுக்கு விசாரணையில் சொல்லப்பட்ட பிறழ்சாட்சியத்தை அவரை அழைத்து வந்தவர் தரப்பில் பயன்படுத்திக் கொள்ளலாம். (முழுமையாக நிராகரிக்கத் தேவையில்லை) 16.06.2006 Amendment படி யாரால், சாட்சி அழைக்கப்பட்டாரோ, அவர்தான் எடுத்துக்கொள்ளலாம்.

***Sec 155** சாட்சியின் நாணயத்தை தாக்குதல்

1. நாணய மற்றவர்
2. லஞ்சம் பெற்றுக் கொண்டு சாட்சியமளிக்கிறார்
3. முரண்பாடான சாட்சியமளிக்கிறார் என்று வேறொரு சாட்சியத்தின் மூலம் தாக்கலாம்.

வன்புணர்ச்சி வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் ஏற்கனவே ஒழுக்கம் கெட்டவர் என காட்டப்படலாம் என்று இருந்த இந்த விபரம் 2005 ஆம்வருடம் நீக்கப்பட்டு பிரிவு 146ல் <u>ஒழுக்கம் கெட்டவர் என கேட்கப்படக்கூடாது</u> என சேர்க்கப்பட்டுள்ளது. (23.6.2006)

***Sec 156** தொடர்புற்ற நிகழ்மையின் சாட்சியத்திற்கு உறுதியூட்டக் கூடிய கேள்விகள் அனுமதிக்கப்படும்.

(உதாரணம்) கொள்ளை நடந்தபோது, கூட்டுக்குற்றவாளியான 'அ' என்பவர் தாம் கொள்ளையடித்தபோது கொள்ளைக்கு சம்மந்தமில்லாத ஆனால் வழியில் கண்டவிபரங்கள் பற்றி ஒப்புதல் வாக்கு மூலத்தில் சொன்னவற்றை உறுதி யூட்டும் விதமாக தனிப்பட்ட சாட்சியங்கள் மூலம் அதை நிரூபிக்கலாம். (Circusmtance Evidence)

***Sec 157** <u>Corroborate Witness</u>

(Coupled Sec 145 IEA) ஒரு நிகழ்மையில் ஒரு சாட்சி கூறும் சாட்சியத்தை உறுதிப்படுத்த பிந்தைய சாட்சி மூலம் அந்த சாட்சியத்தை மெய்ப்பிக்கலாம்.

**Sec 158** ஒரு மரணவாக்கு மூலத்தைப் பற்றிய உரையை சாட்சி ஒருவர் சாட்சியமளித்த பொருண்மைகளை குறுக்கு விசாரணையும் மறுதலிப்பாரானால் மற்ற ஏனைய விஷயங்கள் நிரூபணம் செய்திருக்கக்கூடுமோ அந்த அனைத்து விஷயங்களையும் மெய்ப்பிக்கலாம். (32 (1) IEA Coupled Section)

***Sec 159** சாட்சி உரிமை வழக்கு Document குற்றவழக்கு ஆகியவைகளில் நினைவை புதுப்பித்துக்கொள்ள வழக்கின் கோப்பை பார்வையிடலாம். விசாரணை அதிகாரி பார்வையிட்டு நினைவை புதுப்பித்துக் கொண்டு சாட்சியம் அளிக்கலாம். வல்லுநர் ஒருவர் தொழில் முறை ஆய்வுகளை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கலாம்.

***Sec 160** பிரிவு 159ன் படி சாட்சி நினைவை புதுப்பித்துக் கொள்ள கோப்பை பார்வையிடும்போது எதிர்தரப்பு வழக்கறிஞர் குறுக்கு கேள்வி கேட்கலாம்.

***Sec 161** தரப்பினர் வழக்கு கோப்பை பார்த்து சாட்சி சாட்சியம் அளிக்கும்போது கோப்பை எதிர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுப்பெற்று பார்க்க உரிமை உண்டு.

**குறிப்பு :** 172 குவிமுச ல் வழக்கு நாட்குறுப்பை விசாரணை அதிகாரி, நடுவர், அரசு வழக்கறிஞர் மட்டும் பார்க்கலாம் ஏனையோருக்கு பார்க்க உரிமை இல்லை எனக் கண்டுள்ளது. Case Diary Cannot be Marked.

**Sec 162** Plaintiff – Dependent

ஒரு நீதிமன்றம் ஆவணம் ஒன்றை தாக்கல் செய்ய அழைப்பாணை அனுப்பும் போது அரசாங்க காரியங்களை குறிப்பிடுவதாய் இருந்தாலன்றி அதை தாக்கல் செய்ய மறுக்கக்கூடாது. (ரகசியங்களாக இருந்தாலும் மறுக்கக்கூடாது) ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டு இதை பிறரிடம் வெளிப்படுத்தக் கூடாது. என கோரிக்கை வைக்கலாம். (உதாரணம்) 161 (3) குவிமுச ல் கூட இந்த பகுதியை எதிரிக்கு நகலாக தரவேண்டாம் என நடுவருக்கு கோரிக்கை வைக்கலாம். (Memo of Evidence) (91 CRPC)

**Sec 163** ஒரு தரப்பினர், மறுதரப்பினரிடம் ஒரு ஆவணத்தை தாக்கல் செய்யக் கோரி அதன்படி தாக்கல் செய்த பின்பு அதை கேட்ட தரப்பினர் பரீசீலனை செய்து பார்த்துவிட்டு இந்த ஆவணத்தை Mark செய்ய வேண்டாம் என மறுக்கக்கூடாது.

**Sec 164** ஒரு அசல் ஆவணம் எதிர் தரப்பில் தன்னிடம் இல்லை என மறுக்கிறார் வாதிதரப்பில் அதே ஆவணம் நகலாக கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பின்பு பிறகு எதிர்தரப்பில் அசல் ஆவணம் தாக்கல் செய்ய அனுமதி இல்லை.

***Sec 165** ஒரு வழக்கில் தொடர்புற்ற நிகழ்மைகளை கண்டு பிடிக்க, நடுவர், நீதிபதி தரப்பினர்களை எந்த சூழ்நிலையிலும், எந்தக் கேள்வியையும் கேட்டு பதில் பெற அதிகாரமுண்டு. Any என்பது 18 முறை Indian Evidence Act புத்தகத்தில் உள்ளது. (பிரிவு 121 IEA To 131 IEA விபரங்களை கேட்கவோ, பிரிவு 148,149 விபரங்களின் படியோ கேள்விகள் கேட்கக்கூடாது.

ImRe : Ram Chandar, Air 1981 Supremecourt Page 1036

ImRe : Rikesh Dhivari, AIR 2010 Supremecourt Page 3823

**Sec 166** சான்றாயத்திற்கு (Jury) அல்லது தீர்ப்பு உதவியாளர்களுக்கும் (Assessors) நீதிபதி அனுமதியுடனோ, நீதிபதி மூலமாகவோ கேள்விகளை கேட்க அதிகாரம் உண்டு.

## அத்தியாயம் – 11

சாட்சியத்தை முறையற்ற வகையில் அனுமதித்ததற்கும் நிராகரித்ததற்கும் புதிய விசாரணை கிடையாது.

***Sec 167** (Coupled Sec 99 CPC & 465 CRPC)

99 CRPC சிவில் கேஸில் Judge 1 Degree Pass செய்கிறார் (Error) தவறு (Irregularity) ஒழுங்குமுறை இல்லாமை இருந்தாலும்

கூட தீர்ப்பை ஏற்றுக்கொள்ளும். (வழக்கின் Merrit Jurisdiction மாறுபாடு இல்லையென்றால்) **465** CRPC. CRPCல் சொல்லப்பட்ட சட்டப்பிரிவை மீறி நீதிமன்றம் தீர்ப்பு சொன்னால் கூட அந்த தீர்ப்பை மதிக்கும் (நீதிக்கு பாதகம் இல்லை என்றால்) (No New Trial)

**Sec167IEA** A மீது Police ஒருவழக்கு தொடுத்தபின்பு Trail இடையில் ஒரு Document ஐ mark செய்யும் போது Defense தரப்பு அதை மறுக்கும். மீறி மாஜிஸ்டிரேட் Police ஐ Mark செய்ய அனுமதிப்பார். எதிரிதரப்பில் ஒரு Document Mark செய்ய அனுமதி கேட்பார். அதை மாஜிஸ்டிரேட் மறுத்துவிடுகிறார் வழக்கு தண்டனையில் (எதிரிக்கு பாதகமாக) முடிகிறது.

பின்பு Sessions நீதிமன்றத்திற்கு எதிரி வழக்கை அப்பீல் செய்கிறார். கீழமை நீதிமன்றத்தில் எனது Document Mark செய்ய நடுவர் மறுத்ததால் தான் தண்டனையில் முடிந்தது நான் Mark செய்தால்விடுதலை ஆகியிருப்பேன் என எதிரி வாதிடுகிறார். Police Document ஐ Mark செய்ய அனுமதித்து உள்ளார். இது ஒரு தலைப்பட்சமானது என்கிறார். மேல் நீதிமன்றம் Police Document ஐ நிராகரித்து எதிரி தரப்பு Document ஐ Mark செய்தும் பரிசீலிக்கும்போது ஏனைய சாட்சிகள் (Document தவிர) கூறும் கூற்று நிரூபணமாகிவிட்டால் கீழமை நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை (தண்டனையை) ரத்து செய்யாது.